**-+அண்ணா பிறந்தநாள் | காவல்துறையினர் 127 பேருக்கு அண்ணா பதக்கங்கள்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு**



**சென்னை:** முன்னாள் முதல்வர் அண்ணாவின் பிறந்தநாளையொட்டி, தமிழக காவல்துறை மற்றும் சீருடை பணியாளர்கள் உள்ளிட்ட 127 பேருக்கு அண்ணா பதக்கங்கள் வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். சாயல்குடி உதவி ஆய்வாளருக்கு, வீரதீர செயலுக்கான முதல்வரின் அண்ணா பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: "தமிழகத்தில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை, விரல்ரேகைப் பிரிவு மற்றும் தடய அறிவியல் துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15-ம் நாள் முன்னாள்

முதல்வர் அண்ணா பிறந்த நாளன்று தமிழக முதல்வரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, காவல் துறையில் தலைமைக் காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 100 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் தீயணைப்பு வீரர் முதல் மாவட்ட அலுவலர் வரையிலான 8 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், சிறைத்துறையில் முதல்நிலை சிறைக்காவலர் முதல் சிறை கண்காணிப்பாளர் வரையிலான 10 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், ஊர்க்காவல் படையில் ஊர்க்காவல் படைவீரர் முதல் படைதளபதி வரையிலான 4 ஊர்க்காவல் படை அலுவலர்களுக்கும், விரல்ரேகைப் பிரிவில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கும் மற்றும் தடய அறிவியல் துறை பிரிவில் 2 அலுவலர்கள் துணை இயக்குநர் மற்றும் அறிவியல் அலுவலர் ஆகியோருக்கும், அவர்களின் மெச்சத்தகுந்த பணியினை அங்கீகரிக்கும் வகையில் "தமிழக முதல்வரின் அண்ணா பதக்கங்கள்" வழங்கிட தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

மேலும், சாயல்குடி காவல் சரக எல்லைக்குட்பட்ட பகுதியில், கூட்டுப் பலாத்காரம் மற்றும் கொள்ளை குற்றத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு தலைமறைவான குற்றவாளிகளை 25.03.2022 அன்று கைது செய்யும் பணியில் ஈடுபட்டபோது கே.நவநீத கிருஷ்ணன், உதவி ஆய்வாளர், தீவிர குற்றத்தடுப்பு பிரிவு, ராமநாதபுரம் மாவட்டம், எதிரிகளால் கடுமையாக தாக்கப்பட்டு இடது தொடையில் பலத்த வெட்டுக் காயம் அடைந்த போதும், சற்றும் தளர்வில்லாமல் தனது தைரியச் செயலினால் இரண்டு எதிரிகளையும் கைது செய்ய உதவியாக இருந்துள்ளார். இந்த தாக்குதலில் தலைமைக் காவலர் கருப்பசாமி என்பவரின் உயிரை காப்பாற்ற மிகவும் உதவியாக இருந்துள்ளார். கே.நவநீத கிருஷ்ணன், உதவி ஆய்வாளரின் துணிச்சலையும்,

செயலையும் பாராட்டி அவருக்கு காவல் துறையின் வீரதீர செயலுக்கான "தமிழக முதல்வரின் அண்ணா பதக்கம்" வழங்கிட தமிழக முதல்வர் ஆணையிட்டுள்ளார். மேற்கண்ட பதக்கங்கள் தமிழக முதல்வரால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்." இவ்வாறு தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கழுகை ஆய்வு செய்து தங்கம் வென்ற உதகை அரசு கலைக் கல்லூரி மாணவர்

**உதகை:** உதகை அரசு கலைக் கல்லூரி வனவிலங்கு உயிரியல் துறை மாணவர் ஏ.சாம்சன், வெண்முதுகு பாறு கழுகுகள் வாழ்வியல் ஆய்வில் தங்கப்பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உதகை அரசு கலைக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் நீலகிரி, ஈரோடு, சேலம், தருமபுரி போன்ற மாவட்டங்களை சேர்ந்த 4,500 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். 200-க்கும் அதிகமான பேராசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்தக் கல்லூரிக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் வனவிலங்கு உயிரியல் துறையின் உதவிப் பேராசிரியர் பி.ராமகிருஷ்ணனின் வழிகாட்டுதலில், முனைவர் பட்டத்துக்கான ஆய்வறிக்கை சமர்ப்பித்த மாணவர் ஏ.சாம்சன் தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

இவர், மாயாறு பள்ளத்தாக்கு மற்றும் சீகூர் பீடபூமியில் காணப்படும் 'ஒயிட் ரம்ப்ட் வல்ச்சர்' எனப்படும் வெண்முதுகு பாறு கழுகுகளின் எண்ணிக்கை, இனப்பெருக்கம், சூழலியல் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் பற்றிய ஆய்வுகள் என்ற தலைப்பில் ஆய்வறிக்கை சமர்ப்பித்தார்.




உதகை அரசுக் கலைக் கல்லூரி முதல்வர் அருள்ஆண்டனி, வனவிலங்கு உயிரியல் துறை உதவிப் பேராசிரியர் பி.ராமகிருஷ்ணனுடன், தங்கப் பதக்கம் பெற்ற மாணவர் ஏ.சாம்சன்.

இதுதொடர்பாக வனவிலங்கு உயிரியல் துறை உதவிப் பேராசிரியர் பி.ராமகிருஷ்ணன் கூறியதாவது: மாணவர் சாம்சனின் விடா முயற்சியை பாராட்டியே ஆக வேண்டும். வெண்முதுகு பாறு கழுகுகளின் எண்ணிக்கை, அதன் பழக்கம் மற்றும் வாழ்விடங்கள், கூடுகட்டும் இடங்களைத் தேர்ந்தெடுப்பது, இனப்பெருக்கம் செய்யும் பழக்கம் மற்றும் நடத்தை, சுற்றுப்புறங்களுக்கு தகவமைத்தல், தண்ணீரை பயன்படுத்துதல், ஆபத்தின்போது அது எவ்வாறு தன்னைக் காத்துக் கொள்கிறது என்பதை அவர் ஆய்வு செய்தார்.

முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள வெண்முதுகு பாறு கழுகுகள் கலைக்களஞ்சியமாக மாறியுள்ளன. சாம்சனின் ஆராய்ச்சிகள், அழிந்து வரும் பாறு கழுகுகள் இனத்தைப் பாதுகாப்பதற்கு தேவையான முயற்சிகளை

மேற்கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும். மாணவரின் ஆய்வுக்கு மாநில வனத்துறை அளித்த ஆதரவுக்காக அரசு கலைக் கல்லூரி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.



ஆய்வறிக்கைக்காக தங்கப் பதக்கம் வென்றது இதுவே முதல்முறையாகும். விலங்கியல் மற்றும் வனவிலங்கு உயிரியல் துறை புதிய பூச்சிகள் கண்டுபிடிப்பு, டிஎன்ஏ ஆய்வுகள், இயற்கை ஆய்வுகள், யானை இறப்பு பகுப்பாய்வு, கழுகுகள், விலங்கின ஆய்வுகள் போன்ற பல்வேறு அம்சங்களில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை உதகை அரசுக்கல்லூரி மேற்கொண்டு வருகிறது. இந்த தங்கப் பதக்கம் வன உயிரியல் துறைக்கும், கல்லூரிக்கும் மற்றொரு மைல்கல், என்றார்.

**விமானப்படைக்காக ஏர்பஸ் நிறுவனம் தயாரித்த முதலாவது சி-295 ரக விமானம் இந்தியாவிடம் ஒப்படைப்பு**



ஸ்பெயினின் செவில் நகரில் இந்தியாவிடம் நேற்று ஏர் பஸ் நிறுவனத்தால் ஒப்படைக்கப்பட்ட சி-295

ரக விமானம். இந்த விமானத்தை அரசு சார்பில், இந்திய விமானப் படை தலைமைத் தளபதி வி.ஆர்.சவுத்ரி பெற்றுக்கொண்டார். படம்: பிடிஐ

**புதுடெல்லி:** இந்திய விமானப்படைக்காக ஏர்பஸ் நிறுவனம் தயாரித்த முதலாவது சி-295 ரக விமானம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் உள்ள ஏர்பஸ் நிறுவனம் இந்திய விமானப்படைக்காக சி-295 ரக விமானங்களைத் தயாரித்து அளிக்கவுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும், ஏர் பஸ் நிறுவனமும் கடந்த 2021-ல் கையெழுத்திட்டன.

இதைத் தொடர்ந்து ஸ்பெயினின் செவில் நகரிலுள்ள உற்பத்தி ஆலையில் விமானத்தை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. சி-295 வகையைச் சேர்ந்த56 விமானங்களை இந்திய விமானப் படைக்கு அளிக்குமாறு அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டிருந்தது. இந்நிலையில் இதன் முதல் விமானம் நேற்று இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏர் பஸ் நிறுவனத்திடமிருந்து இந்திய விமானப்படைத் தளபதி வி.ஆர்.சவுத்ரி முதல் விமானத்தைப் பெற்றுக்கொண்டார். அப்போது வி.ஆர்.சவுத்ரி கூறியதாவது: இதுபோன்று மொத்தம் 56 விமானங்கள் வாங்கப்படவுள்ளன. ஸ்பெயினில் தயாரிக்கும் 16 விமானங்கள் 2024-க்குள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும். அதேபோல் இந்தியாவில் தயாரிக்கப்படும் மீதமுள்ள 40 விமானங்கள், 2031-ம் ஆண்டின் இறுதிக்குள் ஒப்படைக்கப்படும். இதன்மூலம் இந்திய விமானப்படை, தனது வான்வழித் திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**குஜராத்தில் உற்பத்தி:** இந்த ஒப்பந்தத்தின்படி 16 விமானங்கள் ஸ்பெயினிலும், 40 விமானங்கள் குஜராத்திலுள்ள வதோதராவில் உள்ள ஆலையிலும் உற்பத்தி செய்யப்படும். வதோதரா ஆலையானது, ஏர் பஸ் நிறுவனமும், டாடா நிறுவனமும் கூட்டு சேர்ந்து ஏற்படுத்தியதாகும். இந்த சி-295எம்டபிள்யூ ரக விமானமானது 5 முதல் 10 டன் எடையை சுமந்து செல்லும் திறன் படைத்தது.

பாராசூட் குழுவினரை குறிப்பிட்ட இடத்தில் தரை இறக்குவதற்கும், சரக்குகளை சுமந்து சென்று தரை இறக்குவதற்கும் இந்தவகையிலான விமானங்கள் பயன்படும்.

இந்த விமானத்தை குறுகிய தூர ஓடுபாதையில் தரையிறக்கவும், மேலெழுப்பவும் முடியும். மேலும் இது தொடர்ச்சியாக 11 மணி நேரம் பறக்கும் சக்தி படைத்தது. இதுபோன்ற விமானங்கள் தற்போது அமெரிக்கா,

இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், உக்ரைன், பிரேசில், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளன. தற்போது இந்தப் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.

EVA STALIN IAS ACADEMY